**அனுப்புநர்**

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்

**ந.க.எண்.100627 / டி / 2019** **நாள் : 03.01.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020 தனித்தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்பது குறித்து வானொலி / தொலைக்காட்சிகளில் அறிவிக்கவும் நாளிதழ்களில் செய்திக் குறிப்பாக வெளியிடக் கோருதல் – சார்பு

*****

ஏப்ரல் 2020–ல் நடைபெறவிருக்கும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு தனித் தேர்வர்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்வது குறித்தான **செய்திக்குறிப்பு** ஒன்றினை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

பொதுமக்களின் நலன்கருதி மேற்படி தகவல்களை அனைத்து மாவட்டங்களிலும் இதனை வானொலியில் / தொலைக்காட்சிகளில் / பத்திரிகையில் செய்தியாக ஒலி / ஒளி பரப்புமாறும் / வெளியிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது ‘‘**விளம்பரம் அல்ல** ’’ என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
**இயக்குநர்**

**இணைப்பு**
செய்திக்குறிப்பு

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்– தங்கள் ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, மாணவர்களை அனுமதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள் – மேற்படி விவரத்தினை தங்கள் உள்ளூர் செய்தித்தாட்களில் செய்தியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# தமிழ்நாடு அரசு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006

## தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஏப்ரல் 2020

## செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

ஏப்ரல் 2020–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **01.01.2020** அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **27.01.2020 (திங்கட்கிழமை) முதல் 31.01.2020 (வெள்ளிக்கிழமை) வரை** **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம்.

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1.முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2.ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

6. **சேவை மையங்கள் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்**

ரூ.175/– தேர்வுக் கட்டணம் செலுத்தி **: 31.01.2020 அன்று மாலை 5.00 மணி வரை**

ஒம்/–

**இயக்குநர்**

இடம் : சென்னை–600 006

நாள் : 03 01 .2020

**DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI-6**

**EIGHTH STANDARD PUBLIC EXAMINATION (PRIVATE STUDY)**
**APRIL 2020**

# PRESS RELEASE

**Applications are invited for admission to the Eighth Standard Public Examination (Private study) to be held in April 2020 only from Private Candidates who have completed 12½ years of age as on 01.01.2020**

**Applications can be uploaded through online at the nodal centres mentioned in the website www.dge.tn.gov.in from 27.01.2020 to 31.01.2020**

**REMITTANCE OF EXAMINATION FEES :**

**The Examination fee of Rs.125/- and also online application Registration fee Rs.50/- Total Rs.175/- to be paid at the Nodal Centres by the candidate directly.**

**Enclosures :**
**1.For Direct Private Candidates (First time):**

*** Transfer Certificate (Xerox copy) / Record Sheet (Xerox copy) /**
*** Birth Certificate (Xerox copy) (Any one)**

**2. Already applied and failed, Now applying for failed subjects:**

*** Previous appearances-photo copy of certificates.**
**The candidates mentioned in Sl.No.1 and 2 should enclose a Self-Addressed cover with Stamp Rs.42/-**

**THE LAST DATE FOR APPLYING FOR THE EXAMINATION**

**By paying the fees amount of Rs.175/-: 31.01.2020 at 05:00 pm.**

**List of Nodal Centres & Candidate's Instruction is available in website www.dge.tn.gov.in**

**Sd/-**
**DIRECTOR**

**Place : CHENNAI-6**
**Date : 03.01.2020**